நாள் 28.11.2024

சி.சி. 36/2022

புசா 1

பெயர் : வெற்றிவேல்

த/பெ.சண்முகவேல்

(Complainant and accused present)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. என்னுடைய புகார், சட்ட அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைதான். இவ்வழக்கு தொடுப்பதற்கு முன்பாக எதிரியை எனக்கு 3 வருடங்களாக பழக்கம். இவ்வழக்கிற்கு முன்பு எதிரியுடன் இரண்டு வியாபார பரிவர்த்தனைகள் செய்துள்ளேன். மேற்படி பரிவர்த்தனைகளின் அடிப்படையில் வழக்கு காசோலையை எதிரி எனக்கு கொடுத்தாரா என்றால் இல்லை.

2. காசேலை எண்.159903 என்ற எனது காசோலையை எனது வங்கியில் வசூலுக்கு செலுத்தி அந்த பணத்தை RTGS மூலமாக எனது வங்கியில் இருந்து எதிரியின் வங்கிக்கு அனுப்பியுள்ளேன். என்னுடைய புகார், சட்ட அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் காசேலை எண்.159903 என்ற எனது காசோலையை எதிரியிடம் கொடுத்து எதிரி அதை தனது வங்கியில் செலுத்தி பணமாக்கிக்கொண்டார் என்று நான் கூறியிருந்தால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

3. வழக்கு காசோலையை எதிரி எதற்காக எனக்கு கொடுத்தார் என்றால் நான் காயர் பித் சப்ளை செய்யுமாறு எதிரியிடம் கேட்டேன் அதற்கு எதிரி அட்வான்ஸ் தொகை செலுத்துமாறு கூறினார். அதற்காக நான் வங்கி மூலம் எதிரிக்கு பணம் அனுப்பினேன். அதன்பிறகு எதிரி எனக்கு காயர்பித் சப்ளை செய்யவில்லை. எனவே நான் பணத்தை திருப்பித்தருமாறு கேட்டேன். அதற்காக எதிரி வழக்கு காசோயை எனக்கு கொடுத்தார்.

4. என்னுடைய புகார், சட்ட அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு எவ்வளவு காயர்பித் தேவைப்பட்டது, அதன் அப்போதைய சந்தை விலை என்ன என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் நினைவில்லை. என் புகாரில் கூறியுள்ள எதிரியின் காசோலை எண்கள். 943189 ரூபாய் 3 லட்சத்து 50 ஆயிரத்திற்கு கொடுத்தது என்ன ஆயிற்று என்றால் எதிரி மேற்படி காசோலையை

எனக்கு கொடுத்து அதை வசூலுக்கு தாக்கல் செய்ய வேண்டாம் என்றும் தொகையை திரும்பி தந்துவிடுவதாகவும் கூறினார். ஆனால் அவ்வாறு தொகையை தரவில்லை. காசோலையின் காலம் முடிவுபெறுவதாக தெரிந்ததால் அதை வசூலுக்கு செலுத்தினேன். வங்கியால் மேற்படி காசோலை போதிய பணமில்லை என்ற காரணம் கூறி திருப்பப்பட்டது. அதன்பிறகு எதிரி மேற்படி காசோலையின் தொகையை திருப்பித்தருவதாக கூறியதால் காசோலையை அப்படியே என்னிடம் வைத்துள்ளேன்.

5. எதிரி நிறுவனத்திற்கும் என் நிறுவனத்திற்கும் வர்த்தக தொடர்பில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. பொள்ளாச்சி - உடுமலை ரோட்டில், ஏ.எம்.எஸ். பள்ளி பின்புறமுள்ள பாஸ்கர் நகரில் இயங்கி வரும் ரியா காயர்ஸ் நிறுவனர் ரெஜித் என்பவருக்கும் எனக்கும்தான் வர்த்தக தொடர்பு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. எனக்கும் மேற்படி ரெஜித் என்பவருக்கும் உள்ள வர்த்தக தொடர்பின் காரணமாக எங்களுக்குள் இருந்த பரிவர்த்தனைக்காக ரூபாய் 10,55,112/- தொகையை 20.07.2019 அன்று ரெஜித்தின் நிறுவனத்திற்கு அனுப்ப இயலாததால் ரெஜித் மற்றும் எனது சம்மதத்துடன் எதிரியின் நிறுவனமான தென்னை சப் டிரேட்ஸ் என்ற நிறுவனத்திற்கு வங்கி பரிவர்த்தனை மூலும் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல.

7. 22.07.2019 அன்று எதிரி தனது தென்னை சப் டிரேட்ஸ் என்ற நிறுவனத்தின் வங்கி கணக்கில் இருந்து ரியா காயர்ஸ் என்ற நிறுவனத்தின் வங்கி கணக்கிற்கு ரூபாய் 10,55,000/- செலுத்தியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கும் ரியா காயர்ஸ் என்ற நிறுவனத்திற்கும் பிற்பாடு பிரச்சனை வந்ததால் நான் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் எதிரி மீது தனிப்புகார் கொடுத்தேன் என்றால் நினைவில்லை. மேற்படி புகார் கொடுத்த பிறகு காவல் நிலையத்தில் வைத்து என் புகாரில் கூறப்பட்டுள்ள 3 காசோலைகளையும் போலீசார் மூலம் எதிரியிடம் பெற்றுக்கொண்டேன் என்றால் அது பற்றி நினைவில்லை.

8. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் ரெஜித்க்கும் உள்ள தொழில் பிரச்சனை காரணமாக எதிரியையும் ரெஜித்தையும் பழிவாங்கும் நோக்கத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ரெஜித்திற்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் என்னிடம் வியாபார

பரிவர்த்தனைகள் செய்யவேண்டாம் என்று ரெஜித்திற்கு எதிரி அறிவுரை கூறியதால் எனது வியாபாரம் சிறிது பாதிக்கப்பட்டதால் எதிரியை பழி வாங்க வேண்டி இவ்வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. எதிரியின் வங்கி கணக்கிற்கு நான் அனுப்பிய தொகையான ரூபாய் 10,55,112/- தொகையை ரியா காயர்ஸ் நிறுவனம் தங்கள் 3 இன்வாய்ஸ்கள் மூலமாக லாபத்தோடு எனக்கு திருப்பி செலுத்திவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி எனக்கு எந்த பணமும் கொடுக்க வேண்டிய கட்டுப்பாடு இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது)

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.